மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே இப்போது தான் மத்திய அரசின் இசைவு பெற்றவுடன் இவர்களுடைய நலன்களைக் கவனிப்பதற்கு என்றே தனியாகவே ஒரு சட்டம் இந்த அரசின் சார்பாக அறிமுகப்படுத்தப்படும் என்று சொன்னேன். அப்படி சட்டம் அறிமுகப்படுத்தப்படுமானால் நிச்சயமாக இவர்களுக்கு வழங்க வேண்டிய அத்தனை சலுகைகளும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தனமரத் திருடர்களால் கடத்தப்பட்ட அதிகாரிகள்.

*6803 திரு. கே. ரமணி:
திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பெரியார் மாவட்டம், வனப்பிரதேசமான பர்கூரில் 6-8-1989-ல் சந்தன மரங்களை திருடிக்கொண்டு போகும் கும்பல் ஒன்று இரண்டு வனத்துறை அதிகாரிகளையும் வேறு இரண்டு நபர்களையும் சேர்த்து நான்கு பேர்களையும் கடத்திக்கொண்டு போயுள்ளது பற்றி அரசுக்கு புகார் கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவர்களை மீட்கவும், திருட்டுக் கும்பலைப் பிடிக்கவும் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே,

(அ) ஆம். வனத்துறைக்குப் புகார் வந்தது.

(ஆ) கடத்திச் செல்லப்பட்ட நான்கு பேர்களில், இரண்டு பேர் வனத்துறை அதிகாரிகள், மற்றும் இரண்டு பேர் பொது மக்களாவர். அதில், ஒருவர் முதலிலேயே தப்பி ஓடிவந்து வனத்துறை அதிகாரிகளிடம் விவரம் தெரிவித்தார். மீதி மூன்று பேர்களும் கடத்தல்காரர்களால் கொலை செய்யப்பட்டு, அவர்களது உடல்கள் 24-8-1989 அன்று கண்டுபிடிக்கப்பட்டன. இந்தக் கொலைக்காரர்களை காட்டுக் கொள்ளையர்களை பிடிக்க காவல்துறையினர் தீவிர முயற்சிகள் மேற்கொண்டுவருகிறார்கள்.

திரு. வி.கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, இந்தச் சந்தன மரங்களைத் தனியார் திருடிக்கொண்டு செல்வதோடு, இன்றைக்கு சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற வன அதிகாரிகளே தேக்கு மரங்களையும், ஈட்டி மரங்களையும், சந்தன மரங்களுக்கு ஈக்குவலான மரங்களை, பல லட்சம் ரூபாய் மதிப்புள்ளதை, சத்தியமங்கலம் பகுதியில் இருக்கிற மலைப்பகுதி

1990 மே 8]

களிலிருந்து—அதாவது சேர்மானம், சல்லபாளையம் போன்ற பகுதிகளிலிருந்து—கடத்தப்பட்ட மரங்களைக் கூட பறக்கும் படை அதிகாரிகள் பிடித்து, 3, 4 பேர்களை, கார்டு, வாட்சர் பாரஸ்டராக இருப்பவர்களை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். ஆனால் முழுமையாக அதிலே தவறு செய்தவர் பாரஸ்ட் ரேஞ்சர் என்று கருதுகிறோம்.

(10-00 மணி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள். குற்றச்சாட்டு வேண்டாம்.

பேரவையின் ஒப்புதலுடன் வினாக்கள்-விடைகள் நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

திரு. வி.கே. சின்னசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கூட அது வந்திருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது தனியார்களைவிட அரசு வன இலாக்காவிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக இருக்கிற காரணத்தால், அவர்கள் தப்பித்திருக்கின்ற அந்த அதிகாரிகள் மீது தனிக் கவனம் செலுத்தி, மீண்டும் பரிசீலித்து அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல வனத்துறையினுடைய சில அதிகாரிகளும் இதற்கு உடந்தையாக இருக்கிறார்கள். ஆனால் இது இன்றைக்கு நடைபெறுவதல்ல. கடந்த 15 ஆண்டுகளாக இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெற்று, அதனுடைய தொடர்ச்சியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அவைகளைக் களைந்து எறிய நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கடத்திச் சென்று கொலை செய்தவர்கள் இந்த மாயாவி, வீரப்பனுடைய கும்பலைச் சார்ந்தவர்களா, அல்லது தனியார் வேறு ஏதாவது கும்பலைச் சார்ந்தவர்களா என்று சொல்கிற துப்பு ஏதாவது இதுவரை கிடைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வீரப்பனுடைய கும்பலைச் சேர்ந்தவர்கள்தான் என்று தகவல் கிடைத்திருக்கிறது.

திரு. தூ.க. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரப்பனுடைய கும்பலால் கடத்தப்படுகிறது என்றும் கொலை செய்தார்கள் என்றும் சொல்கிறார்கள். அதைப்

போல இப்போது அந்தப் பகுதியிலே பலர் அவர்களது பெயரை வைத்து மரங்களைக் கடத்திச் செல்கிறார்கள். இது அரசுக்குத் தெரியுமா? அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வீரப்பனுடைய கும்பலைச் சார்ந்தவர்கள் கடத்தியபோது, அங்கேயே மலையிலே வாழ்கின்ற மலைவாசிகளுடைய உதவியைக் கொண்டுதான் அவர்கள் கடத்திச் சென்றார்கள். ஆகவே வீரப்பனும் அவர்களுடைய நண்பர்களும் ஒரு கட்டுக்குள் கொண்டு வரப்படுகிறபோது, ஏற்கனவே அவர்களோடு ஒத்துழைத்த மலைவாசி மக்கள் அங்கே இருக்கிறார்கள். ஆகவே சிறுகச் சிறுக இந்தக் கடத்தல் தொழில் குறைந்துவருகிறது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தனக் கட்டைகளைக் கடத்துவதைத் தடுப்பதற்கு வனத்துறை அதிகாரிகளால் முடியவில்லை என்ற நிலையில், அங்கே அதிக அளவில் காவல் துறையினரை நியமனம் செய்து, கடுமையான தண்டனை வழங்குவதற்கு வழிவகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இந்த அவையிலே அறிவித்திருக்கிறேன். காஷ்மீர், ராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் எல்லாம் இருப்பதைப் போன்று வனத்துறையிலே வனக் காடுகளை வளர்ப்பதற்கும், அதைப்போல காடுகளைப் பாதுகாப்பதற்கும், எக்காலஜிகல் பட்டாலியன் என்ற ஓர் அமைப்பை இங்கே அமைக்க ஒரு கருத்து பரிசீலனையில் இருந்து கொண்டு இருக்கிறது.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சந்தனக் கட்டைகளைக் கடத்துகின்றவர்கள் எல்லாம் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். வனத்துறை அதிகாரிகளைச் சுட்டு வீழ்த்துவது என்கிற நிலை நீடித்துக் கொண்டிருக்கிற காரணத்தால், வனத்துறை அதிகாரிகளுக்கு நவீனத் துப்பாக்கிகள் வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, வனத்துறை அதிகாரிகளுக்கும் துப்பாக்கிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)